# IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II , ULUNDURPET

## DEPOSITION OF WITNESS

(Chapter XXIII, Code of Criminal Procedure)

## CC NO. 554/2025

**Date :** 13.05.2026 **PW 7/ LW7**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | செல்வராஜ் | ஆதார் எண் | |
| தந்தை பெயர் | வைரக்கண்ணு | தொழில் | உதவி ஆய்வாளர் - புவனகிரி காவல் நிலையம் |
| கிராமம் | புவனகிரி | வயது | 59 |
| எதிரிகள் 1, 2 ஆஜர். எதிரிகள் வழக்கறிஞர் ஆஜர். | | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873.

**முதல் விசாரணை**

நான் தற்போது கடலூர் மாவட்டம் புவனகிரி காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். நான் திருநாவலூர் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணி புரிந்தபோது கடந்த 24.04.2023 அன்று காலை 11.00 மணியளவில் நிலைய பொறுப்பில் இருந்தபோது நிலைய மனு ரசீது எண் 422/2023 ல் பரிசீலனை செய்தபோது கடந்த 17.04.2023 அன்று பெரும்பட்டு கிராமத்தை சேர்ந்த விருதாம்பாள், க/பெ. ஆறுமுகம் என்பவர் நிலையம் ஆஜராகி புகார் கொடுத்ததன் பேரில் மனு ரசீது எண் 422/2023 வழங்கியது தெரியவந்தது. மேற்படி மனு ரசீது மற்றும் புகார் மனுவையும் பரிசீலனைக்கு எடுத்துக்கொண்டு நிலைய குற்ற எண் 196/2023-ல் 1, 2 எதிரிகளுக்கு எதிராக இ.த.ச பிரிவுகள் 294(b), 323, 324, 354, 506(2) -ன் படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். **முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்னர் 24.04.2023 அன்று மதியம் 01.00 மணியளவில் சம்பவ இடம் சென்று சம்பவ இடத்தை பார்வையிட்டு சாட்சிகள் ரமேஷ், மருது பாண்டி முன்னிலையில் பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். அந்த **பார்வை மகஜர் அ.சா.ஆ.5** ஆகும், **மாதிரி வரைபடம் அ.சா.ஆ.6** ஆகும். பின்னர் சம்பவ சாட்சிகளான விருதாம்பாள், ஏழுமலை, த/பெ.பெரியசாமி, ஏழுமலை, த/பெ. ஆறுமுகம் மற்றும் பார்வை மகசர் சாட்சிகளை தனித்தனியே விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். சாட்சிகளின் வாக்குமூலங்களில் இருந்து சம்பவம் உண்மை என தெரியவந்ததால் இவ்வழக்கின் எதிரி நாகப்பன் (எ) சிவபெருமாள் என்பவரை

24.04.2023 அன்று நண்பகல் 14.00 மணியளவில் பெரும்பட்டு முருகன் கோயில் அருகில் வைத்து கைது செய்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினேன். பின்னர் இவ்வழக்கின் காயம்பட்ட அ.சா.1 விருதாம்பாளுக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் சதாவெங்கடேசன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து அ.சா.1 க்கு ஏற்பட்ட காயம் சொற்பகாயம் என சான்றிதழ் பெற்றேன். அ.சா.1 விருதாம்பாளின் **காயச்சான்றிதழ் அ.சா.ஆ.7 ஆக** குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் இத்துடன் விசாரணையை முடித்து 1 வது எதிரிக்கு எதிராக இதச பிரிவுகள் 294(b), 323, 324, 354, 506(2) -ன் கீழும், 2 வது எதிரிக்கு எதிராக இ.த.ச பிரிவுகள் 294(b), 323, 324, 506(2) -ன் கீழும் இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

## குறுக்கு விசாரணை

சம்பவமானது 17.04.2023 அன்று மாலை 4 மணிக்கு நடைபெற்றது என்று சொன்னாலோ ஆனால் முதல் தகவல் அறிக்கையானது 24/4/2023 அன்று காலை 11 மணிக்கு பதிவு செய்யப்பட்டது என்று சொன்னாலோ அது சரிதான். காவல் நிலையத்திற்கும் சம்பவ இடத்திற்கும் சுமார் 7 km தொலைவு இருக்கும் என்று சொன்னால் சரிதான். சம்பவம் நடந்த அன்றே காயமடைந்த நபர் 108 ஆம்புலன்ஸ் மூலம் மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லப்பட்டார் என்று சொன்னால் அது சரிதான். 7 நாட்கள் காலதாமதமாக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது என்று சொன்னால் அன்றைய தினமே வாக்குமூலம் பெறப்பட்டு CSR பதிவு செய்யப்பட்டு CSR.No.422/2023 வழங்கப்பட்டது. நான் வாதியிடமிருந்து புகாரை பெற்றுக் கொண்டு எதிரிகளுக்கு எதிராக ஒரு பொய்யான புகாரை ஜோடிக்க வேண்டி தான் 7 நாட்கள் காலதாமதம் ஆனது என்று சொன்னால் அது சரியல்ல. சாட்சி ராமர், தான் காவல் நிலையத்தில் வைத்து பார்வை மகசரில் கையொப்பம் செய்ததாக கூறியிருந்தால் அது சரியல்ல. அவரிடம் சம்பவ இடத்தில் வைத்துதான் பார்வை மகசரில் கையொப்பம் பெற்றேன். சம்பவம் நடந்தபோது சம்பவ இடத்தில் வேறு யாரும் இல்லை என அ.சா.1 விருத்தாம்பாள் கூறி இருந்தால் அது சரியல்ல. அ.சா.1 விருத்தாம்பாள் சம்பவ இடத்தில் வேறு யாரும் இல்லை என தனது குறுக்கு விசாரணையில் கூறியுள்ளார் என்றாலோ ஆனால் நான் அ.சா.2 ஏழுமலை, த/பெ. ஆறுமுகம் மற்றும் அ.சா.6 ஏழுமலை, த/பெ. பெரியசாமி ஆகியோர்களை சம்பவ சாட்சிகளாக பொய்யாக சேர்த்துள்ளேன் என்று சொன்னால் அது சரியல்ல. அ.சா.5 மருத்துவர் சதா வெங்கடேஷ் அவரது காயச் சான்றிதழில் அ.சா.1 விருத்தாம்பாளுக்கு வெளிக்காயங்கள் ஏதுமில்லை என காயச் சான்றிதழ் வழங்கியுள்ளார் என்று சொன்னால் சரிதான். புகார்தாரர் தன்னை மண்வெட்டியால் தாக்கியதாக புகார் அளித்துள்ளார் என்று சொன்னால் அது சரிதான். புகார்தாரருக்கு

வெளிக்காயங்கள் ஏதும் ஏற்படவில்லை என்று சொன்னால் அது சரிதான். அவ்வாறு வெளிக்காயங்கள் இல்லாத போதும் நான் எதிரிகள் மீது கடுமையான பிரிவுகள் (324, 354 IPC) கீழ் பொய்யான வழக்கு பதிவு செய்துள்ளேன் என்று சொன்னால் அது சரியல்ல. நான் தாக்கியதாக கூறப்படும் மண்வெட்டியை கைப்பற்றினேனா என்றால் இல்லை. புகார்தாரருக்கும் எதிரிகளுக்கும் நிலம் சம்பந்தமாக முன்விரோதம் இருந்த விவரத்தை எனது விசாரணையில் நான் தெரிந்து கொண்டேனா என்றால் தெரிந்து கொண்டேன். புகார்தாரருக்கும் எதிரிகளுக்கும் ஏற்கனவே இருந்த முன்விரோதம் காரணமாக எதிரிகளுக்கு எதிராக ஒரு பொய்யான புகாரை புகார்தாரர் கொடுத்துள்ளார் என்று சொன்னாலோ நான் அந்த பொய்யான புகாரை பெற்று எதிரிகளுக்கு எதிராக ஒரு தவறான இறுதி அறிக்கை தாக்கல் செய்து நீதிமன்றத்தில் சமர்ப்பித்துள்ளேன் என்று சொன்னால் அது சரியல்ல. புகார்தாரர் கூறுவது போல் சம்பவம் ஏதும் நடைபெறவில்லை என்று சொன்னாலோ அவ்வாறு நடந்திருந்தால் அவர் சம்பவ சாட்சிகளை குறிப்பிட்டு கூறியிருப்பார் என்று சொன்னாலோ மேலும் மண்வெட்டியை நான் கைப்பற்றி நீதிமன்றத்தில் வழக்கு சொத்தாக கொடுத்திருப்பேன் என்று சொன்னாலோ அது சரியல்ல.

<u>மறுவிசாரணை</u> - இல்லை.

Taken down by me certified that this contains a true and correct statement made by the accused/witness read over and admitted by him/her to be correct.

Sd- Thiru.R.P.Ajieth Singh Raaja
Judicial Magistrate-II,
Ulundurpet.